**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.55/2023**

PW-4

| Name | மணியன்(PW4) | | |
|---|---|---|---|
| Father's Name | கோபால் | Calling | |
| Village | பழங்கரை | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of March 2026** by Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:–**

10.06.2022 மாலை 5 மணி அளவில் குழந்தையின் தாயார் விஜயலட்சுமி எனக்கு போன் மூலமாக குழந்தையை காணவில்லை என்று தகவல் தெரிவித்தார். மேற்படி விஜயலட்சுமி என் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார் அந்த குழந்தை 6 மாதமாக இருந்த காலம் முதல் எங்கள் கம்பெனியில் வைத்து தான் பராமரித்து வந்தார்கள். சம்பவம் நடந்த அன்று டீ கொண்டு வந்த நபர் கேட்டை திறந்து வைத்துவிட்டு சென்றுள்ளார். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன பின்பு நான் அங்கு வந்து தேடிப் பார்த்தேன் அப்போது கம்பெனிக்கு அருகே நிலத்தொட்டி ஒன்று இருந்தது அந்த நிலத்தொட்டியில் முன்பு தண்ணீர் நிரப்பப்படாமல் இருந்தது அங்கு சென்று பார்த்தபோது நிலத்தொட்டியில் தண்ணீர் இருந்தது எதற்கும் அந்த தொட்டியில் தேடிப் பார்க்கலாம் என்று தேடிப் பார்த்தபோது குழந்தை அதில் இருந்தது நான் தான் தண்ணீர் தொட்டிக்குள் இறங்கி குழந்தையை தண்ணீர் தொட்டியில் இருந்து எடுத்தேன். சம்பவம் நடந்த இடத்தில் இரண்டு தண்ணீர் தொட்டிகள் உள்ளது அந்த தண்ணீர் தொட்டிகள் மூடப்படாமல் இருந்தது. பின்பு குழந்தையை அவிநாசி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தோம் இங்கு குழந்தை காலம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதன் பின்னர் காவல் துறையினர் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். எனது கம்பெனியின் பெயர் பெருமாள் கார்மெண்ட்ஸ். சம்பவம் நடந்த இடத்திற்கும் பெருமாள் கார்மெண்ட்ஸ் இருக்கும் இடத்திற்கும் 150 முதல் 200 அடி தூரம் இருக்கும். எனது கம்பெனியில் இருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு வர வேண்டும் என்றால் கம்பெனியை தாண்டி ஒரு தடம் உள்ளது அந்த தடத்தை தாண்டி ஒரு கட்டிடம் அல்லது அதற்கு அருகாமையில் தான் சம்பவம் இடம் உள்ளது. அங்கு கட்டிட வேலை சுமார் 6 மாதங்களாக நடைபெற்று வந்தது. குழந்தையை சரியாக பராமரித்து இருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான் ஆனால்

நிலத்தொட்டியை மூடி வைத்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது. அந்த நிலத்தொட்டி சல்லடை வைத்து மூடி வைத்திருந்தார்கள் என்றால் இல்லை சம்பவம் நடந்து 3 நாட்களுக்கு பின்னிட்டு தான் மூடி வைத்திருந்தார்கள். தொட்டியை மூடி வைத்திருந்தார்கள் என்றும் தற்போது வழக்குக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>(Sd.) N. Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |